**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 396-2023**

| L.W.5 P.W.2 | | |
|---|---|---|
| Name: | பன்னீர்செல்வம் | Caste: |
| Father’s Name: | பக்கிரிசாமி | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2026

(எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது நாலுவேதபதியில் குடியிருந்து வெள்ளப்பள்ளத்தில் ஹார்டுவேர்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடைய கையொப்பம் எதுவுமில்லை. பின்னிட்டு, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு கொடுக்கப்பட்ட அழைப்பாணையில் உள்ளபடி தான் நான் கையொப்பம் செய்வேன். அழைப்பாணையில் உள்ள கையொப்பமும், பார்வை மகஜரில் உள்ள கையொப்பமும் ஒத்து உள்ளதா என்றால், இல்லை. கடந்த 28.10.2020 அன்று, மதியம் சுமார் 02.30 மணியளவில், நான் எனது கடையில் இருந்தபோது, நடந்த விபத்து சம்பந்தமாக போலிசார் விசாரித்து, படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக கையொப்பம் செய்ததாகவும் கூறிவிட்டு, தற்போது கையொப்பம் என்னுடையது இல்லை என்றும், சங்கதிகளை மறைத்தும், எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 09.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**